உ

# நவராத்திரி ஓடம்

இஃது

கும்பகோணம்

சோலையப்பமுதலியார் அக்கிரகாரத்திலிருக்கும்

ஜானகியம்மாளால்

இயற்றி

கும்பகோணம்

மங்களவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

# ஆஞ்சனேயாபாஹி:-

## நவராத்திரி ஓடம்.

ஸ்ரீராமர் கிருபையாலே அவர் தாஸருட தயவாலே
சித்திவிநாயகரும் அவர் கௌபவரே நான்பணிந்தேன்
ஆதிகும்பேஸ்வாரும் அம்பாமங்களமும் கூடிருக்கும்
நவராத்திரிவேடிக்கை இந்நானிலத்தில்சொல்லவென்று

---

### முடுக்கு.

எங்கெங்கு ஊரிலுள்ள ஜனங்களும்கூடி
ஏகமாய் வந்தார்கள் குடந்தைநகரதேடி.
நாலுதிக்கிலும் கூட்டம் நாகரீகமாக
நாடியே வந்தார்கள் அதிவேகமாக
சக்கரப்பாணியுடன் சாரங்கப்பாணி
கோமட்டிகோபாலன் ஆஞ்சனேயமூர்த்தி
ஸ்ரீராமஸாமியுடன் வாராகமூர்த்தி
உச்சியில்பிள்ளையார் ஏழைச்சோமேசன்
உச்சிதமாகவே அபிமுகேசன்
அடுத்தாப்போலேயங்கே கைலாஸவாஸன்
நாகேஸ்வரன் கோவில் சன்னதியுமுண்டு
நாலுவீதியுமங்கே தாஸிமாருண்டு
இன்னமனேகம் கோவில்களுமுண்டு

எந்தவிடத்திலும் வேடிக்கையுண்டு
ரயில்விட்டுகீழிறங்கி நாலுதிக்கும் ஜனங்கள்
நாகரீகமாகவேப் போகுறார்ப்பாரு
மாமகசகுளத்தையும் மஹிமையும்ப்பாரு
வழிநடுவிலே போஸ்டாப்பீஸ்ப்பாரு
பொகுஜனகூட்டமுடன் உடையாருடவீடு
அவருக்குஉண்டோடி அவனியிலேயீடு
பொகுநாளாய்ப்போடுகிறார் ட்ராமாக்கள்ளாட்டம்
அதர்கென்றமர்ந்ததே அரமனைத்தோட்டம்
போலீஸ்ஷ்டேஷனும் பூட்ஸூக்கடைப்பாரு
புதுசாகதின்பண்டம் லாலாகடைப்பாரு
சட்டிப்பானைகளும் விர்க்குதடியம்மா
தகறக்கடைகளும் இருக்குதடிசும்மா
ஆதிகும்பேஸ்வரர் ஆலயம்வந்தோம்
அனைவருமொன்றாக இங்கியேசேர்ந்தோம்
கருப்பூருச்சாலையில் காலேஜூப்பாரு
கணவாய்களுடனுகப் பாலக்கரைப்பாரு
வக்கல்க்கட்டுவெரதுகட்டு வாழைப்பட்டைக்கட்டு
வகையானகூடைகளும் பக்ஷணக்கடையும்
கண்டவுடன்ருசிதரும் கரிகாய்க்கடையும்
காலவேளைபசியாற்ற காபீக்கடையும்
பார்த்தவுடன்முக்திதரும் பகவத்படித்துறையும்
பரமகுருசங்கராச் சாரியாரையும்
சந்துக்கெதிர்த்தாப்போல் எஸ்ளேஅவுஸ்

சதுரானவிண்டோக்கள் பாரடிஸொகுஸ—
தங்கநிழல்தந்திடும் கிருஷ்ணையர் அவுஸ—
தருமானவக்கீல்கள் இருக்குமிடஸொகுஸ—
விக்கினங்கள்ளில்லாதே விக்கினர்கோவில்
வேணவரன்தந்திடும் மாரியம்மன்கோவில்
ஆனைக்குதிரையுடன் அழகானசீராய்
ஐயனார்கோவிலும் இருக்குதுபாராய்
பச்சைமயில்வச்சிருக்தம பாலாமணி அவுஸ—
பக்கத்தில்ஐயங்கார்கிளப்புமிக ஸொகுஸ—
அபரன்ஸ்கேட்டுகளும் அழகானவீடு
போட்டிருக்கிறாள்பாரு புதுச்சேரிஓடு
ஜெமுனேஷன்செய்திடும் பையன்களைப்பாரு
தெரமாகஇருக்கிர எட்மாஸ்டரைபாரு
புதுசாகக்கட்டியப் போர்டாலைப்பாரு
பூச்செடிகள்நாலுபுரம் வைத்திருக்குப்பாரு
சந்துக்குநேராய்இருக்கும் வாராவதி
வழியாகப்போனாலே பெரியகடைவீதி
கலகலாவென்குர காசிக்கடையும்
கணகணவெங்குர வெங்கலக்கடையும்
பளப்பளாவெங்குர கோல்டுநகையும்
தகதகாவெங்குர கில்டுநகையும்
சாயம்போகாமலே ஜாமீன் குடுக்கும்
சரிகைநிசவுடன் ஜவுளிகளைப்பாரு
பாங்காசவிற்றிடும் பலசாக்குகடையும்

பலசாமான்வாங்கலாம் ஷாப்பைபம்பாரு
ஈயக்கடையினும் பூக்கடை எத்தனையோகடைகள்
ஈவிரிங்கில ஆக்ஷனிடும் எத்தனைபோசாமான்
பழக்கடைப் பூக்கடைப் பாசிமணிகடையும்
பம்பாயிவளைகளும் கங்கணம்பாரு
லாடேரிசீட்டுகளும் லாட் ஊஞ்சல்பாரு
4 அணா கொடுத்துவிட்டு அதமீதிலேரு
போக்கிரிபசகளும் சிருமிகளுங்கூடி
போகிறவழியிலே பேசுரார்கோடி
யங்க்லேடிகம்கியர் என்றவர்சொல்ல
ஐடோன்டச்என்று அதட்டியேசொல்ல
பச்சபுடவையுடன் குச்சுக்காரிகளும்
கொச்சையாய்பேசுகிறார் லஜ்ஜையில்லாமல்
சிலபெண்டுகள்போர அதிஜோரைப் பாரும்
சேம்பேரிபையன்களும் அங்கயேசேரும்
ஊஸன்க்கழிந்திட்டு வந்திராபட்டர்
உசத்தியாய்கிளப்உண்டு இந்தூரில்கிட்ட
சீரஹூாவிக்கஹு இக்டகூடு
சின்னக்கா தீசியீவெ நாகுயிப்புடு
அதோவருகிறார் அம்மங்காள்அத்தை
பேசிக்கொண்டுநாமும் போகலாம்சித்தை
ஒண்ணுக்குஇரண்டுக்கு போவாரைப்பார்த்து
ஒபாமல் கான்ஸ்டேபிள் ஸ்டேஷனில்வைத்து
ஐக்துவையதுள்ள பிள்ளைகாணும்

அதைத்தேடிப்பார்க்க ஒருமணிநேரம் வேணும்
சேவுகர்கொண்டுபோய் ஸ்டேஷனில்வைத்து
தேடிடும்தாய்தப்பமாகளைபார்த்து
பிள்ளையிது உங்களுதுதானே சொல்லும்
புலம்பலாம்அப்பரம் போகாததில்லும்
நகைநட்டு ஏதாகிலும் போட்டதுண்டா
இப்படியும்பிள்ளைகளை விடுவாருமுண்டா
கட்டம்பொருக்காமல் மூர்ச்சையையாய்போக
ஏனென்றுகேட்க வார்சில்லாமலாக
முட்டிதள்ளிக்கொண்டு மொட்டபாப்பாத்தி
முட்டாக்கைபிழுக்துகொண்டு முன்னேலேகிக்க
எங்கவர்தானென்று சேவகர் அதட்ட
அவனுக்குஅசையாமல் இவர்களும்திட்ட
நிற்கின்றதூணின்மேல் ஸ்திரீகளும்தொக்க
போக்கிரிபசங்களும் விலாபக்கம்குத்த
தும்புருநாரதரும் ரம்பையூர்வசியும்
இந்திரன்திலோத்தமை இருக்கும்ஸ்பத
இந்திரசபையிலே உள்ளேசிங்காரம்
எதிரிலேமங்களாம்பாள் அலங்காரம்
சிறிக்கின்றகுழந்தையும் சிலபொம்மைபாரு
ஜீவனாம்சம்வாங்கும் அம்மாளைபாரு
பள்ளியறைபூச்செடிகள் பக்கத்தில்சிங்கம்
பளீரென்றுகண்ணாடி வைத்திருக்கஎங்கும்
தேவியினுடையசன்னிதியில் சிவகொழுந்துமேளம்

ஜிலு ஜிலு போடுகிறாள் பாரங்சே தாளம்
நகராஸநஸபத்து வாத்யங்கள்கேட்டு
அடிக்கடிபோடுகிறார் பார் அதிர்வேட்டு
ஈச்வரியாள் எதிரிலே தாசியுடையசதுரு
ஏகமாய்குபபல் இருக்குதுபார்
டான்சிங்ஆடுகிற ஆட்டதைப்பாரு
காலாடிபசகளுடைய கூட்டத்தைப்பாரு
சட்டையுருமாலை கைக்கடிகாரம்
சதுராகவேகல்ல கத்திரிகோலும்
பளபளப்பான ஒருபென்னைய்ப்கொண்டு
ஏமாந்தபோர்வழி யாரென்றுகண்டு
பாரக்குபாத்துக்கொண்டு பல்லையிளிக்க
படுங்காளிபயலங்கே கழுத்துபணியருக்க
பால்மோருஜலம்விட்டுப் பண்ணேன்சரடு
படுக்காளிபட்டிமகன் கையில்வருங்கேடு
கோரப்பாய்வரளிவித்து வாங்கினேன்தோடு
வந்துதேஇன்னேடு அதற்குஅவகேடு
கல்யாணபணம்வாங்கி காப்படித்துபோடேன்
கட்டாலேபோரவன் கையொடித்துபோட்டான்
கோவிலுக்குள்ளாக கோவென்றுகத்த
கூக்குரல்கேட்டுமே சேவகரும்சுத்த
மிட்டாயிகாரரும் கிட்டவேசுத்த
தட்டிக்கொட்டிக்கொண்டு குழந்தைகளும்கத்த
அல்லோலமாகவே அங்கேபட்டபாடு

திரும்பினார்களெல்லாரும் ஏகமாய்விடு
சொல்லாதேஎன்போனை வாசலிலேநில்லு
எங்கேவந்தாயிப்போ உத்திரம்சொல்லு
முப்பாட்டன்நாளையிலே தேடினசொத்தாச்சே
முழுதும்நவராத்திரியில் பரிகொடுத்தாச்சே
காதுமூளிகழுத்துமூளி கைகொண்டியாச்சே
கண்டபேரெல்லோரும் பழித்திடலாச்சே
வெளியில்புரப்பட வெக்கமாய்போச்சே
வேணபேரெல்லாரும் நகைத்திடலாச்சே
மாமினாத்திகண்டு வகைவகையாய்த்திட்ட
மாருதகோபமுடன் புருஷனும்கொட்ட
கட்டாலேபோரவனே என்னடாசொன்னே
இன்றைக்கிருக்கட்டும் நாளைக்குஉன்னே
சிரிக்கஅடிக்கிறேன் பாரடாபின்னே
திட்டிஅடிக்காதே சும்மாநீயென்னை
தாலிபருக்தவளும் அங்கயேபோட
தாங்காமலேஅவளும் வெளியிலேஓட
ஊரிலுள்ளோர்களும் ஒன்றாககூடி
அப்பரம்போகலாம் இங்கேநீவாடி
இன்னம்சிலவேடிக்கைகள் இருக்குதடியம்மா
ஆகையினால் சிரிப்புவருதடிசும்மா.

ஏலேலோ, ஏலேலோ.